இழப்பு

விமலாதித்த மாமல்லன்

பப்பு இன்னும் இறுக்கமாய் வெங்கட்ராவின் விரலைப் பிடித்துக் கொண்டான். வெங்கட்ராவ் குனிந்து பார்த்ததும் வெட்கத்துடன் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

அந்த ஜாவான் உடையில் ரொம்ப அழகாகத்தான் இருந்தான் பப்பு. வெங்கட்ராவ் ஜமுனாவைப் பார்க்க வருவதே அபூர்வம். ஆனால் பப்பு மட்டும் ஞாபகமாக ஜாவான் உடைபற்றி வெங்கட்ராவிடம் குறிப்பிடத் தவறியதில்லை. இந்த முறை பப்பு வாய்திறந்து கேட்கும் முன்னாலேயே கடைத்தெரு பக்கம் அழைத்து வந்துவிட்டான். ஜமுனாவையும் கூட்டிக்கொண்டு வந்து அவளுக்கும் ஏதாவது வாங்கித்தர விருப்பம்தான். புருஷன் வருகிற நேரமென்று அவள்தான் மறுத்துவிட்டாள். அவளுக்கு மட்டும் விருப்பமில்லாமலா இருக்கும். புருஷன் குணம் தெரிந்து தன்னை மாற்றிக் கொண்டுவிட்டாள். எல்லாவற்றையும் மறந்துவிட்டவளைப் போல நடந்து கொள்ளத் தொடங்கிவிட்டாள். அதுதான் வெங்கட்ராவை அதிகமாக சங்கடப்படுத்தியது.

எப்படித்தான் முடிகிறதோ இந்தப் பெண்களால் எல்லாவற்றையும் விழுங்கிக் கொள்ள. எவ்வளவு சுலபமாய் சொல்கிறாள். சீக்கிரம் கல்யாணம் பண்ணிக்கோ என்று. ஒரு மனுஷியால் சொல்ல முடியுமா இப்படி. இதை சிரித்துக் கொண்டே வேறு சொல்கிறாள். நீ கேள்விப்பட்டதெல்லாம் உண்மையில்லை. நான் சந்தோஷமாகத்தான் இருக்கிறேன் என்பதுபோல. இப்படியொரு மனுஷனுக்கு வாழ்க்கைப் பட்டவள் சிரிக்கவும் முடியுமா?

அவள் சொல்லித்தான் தெரியவேண்டுமா என்ன பார்த்தாலே தெரிகிறதே வீட்டின் நிலைமை. உட்கார ஒரு ஸ்டூல்கூடவா இல்லாமல் போய்விடும். கடைக்குப்போய் டீத்தூள் வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு, பக்கத்து வீட்டிலிருந்து சர்க்கரை வாங்கிக் கொண்டு வருகிறாள், முந்தாணையில் மறைத்து. அவனுக்கு அவள் நிலைமை தெரிந்துவிடக் கூடாதாம். அவன்கூட மூன்றாவது மனுஷனாகிவிட்டான்.

வேர்வைப் பிசுபிசுப்பில் பப்புவின் கை வழுக்கி விடுபட்டது. வெங்கட்ராவ் குனிந்து கைக்குட்டையால் பப்புவின் கையைத் துடைத்து விட்டான். தூக்கிக் கொள்ளட்டுமா என்று கேட்டான். தலையைக் கவிழ்த்தபடி இசைவைத் தெரிவித்தான் பப்பு. தூக்கிக் கொள்கையில் குழந்தையின் வெற்றுக்கால்கள் உறுத்தின. முக்கில் தென்பட்ட செருப்புக் கடைக்குள் நுழைந்து பப்புவை இறக்கினான்.

செருப்புக்கடையில் இருந்து வெளியில் வந்தபோது இருட்டி, கடைகளில் தெருவில் என்று எல்லா இடத்திலும் விளக்குகள் போடப்பட்டிருந்தன. யோசனையில் இருந்தவனிடம் ஏதோ சொன்னான் பப்பு. என்னஎன்ன என்று இவன் கேட்டான். இவனுடைய காதில் ஐஸ்கிரீம் என்று வெட்கத்துடன் கிசுகிசுத்தான் பப்பு.

பப்புவுக்கு இல்லாத ஐஸ்க்ரீமா? ஏன் வெக்கம். மாமாகிட்டேயே வெக்கப்படலாமா? அப்புறம் மாமாவுக்கு ரொம்ப வருத்தமாயிடும். மாமா அழும், என்று வார்த்தைக்கு வார்த்தை முகத்தை சுருக்கிக் கொண்டே வந்து, கடைசியாக அழுவது போல பாவணை செய்தான் வெங்கட்ராவ். குழந்தை நிஜமென்று நம்பி, கொஞ்சம் கொஞ்சமாக மலர்ச்சி வடிந்து உதட்டைப் பிதுக்கும் சமயத்தில் ‘ஹோ’ வென்று கத்தியபடி நடுத்தெருவில் தூக்கிப் போட்டுப் பிடித்தான். பப்பு சற்று திடுக்கிட்டுப் பின்னர் சிரித்தான்.

ஓட்டலில் தன் காலுக்கடியில் பையைத் தோளில் இருந்து கழற்றி வைத்தான். அதில் பப்புவின் பழைய சட்டையும் டிரவுசரும் துருத்திக் கொண்டு தெரிந்தன. பப்புவை சேரில் தூக்கி உட்கார வைத்துவிட்டு, துணியை உள்ளே அழுத்தி ஜிப்பை முழுசாக இழுத்து விட்டான்.

இரண்டு புரூட்சாலட் வரவழைத்தான். பப்புவுக்கு மேசையில் மோவாய் இடித்தது. இவனே எடுத்து சிந்தாமல் ஊட்டிவிட்டான். குழந்தை குதூகலமாய் சாப்பிடுவதைப் பார்க்க சந்தோஷமாய் இருந்தது. இவ்வளவு அருமையான குழந்தையை எப்படியெல்லாம் வைத்துக் கொள்ளலாம்.

ஜமுனாவின் புருஷன் சாயங்காலம் வீட்டுக்கு வந்து சாப்பிட்டுவிட்டு வேலை இருக்கிறது என்று ஆபீஸ் போய்விடுகிறானாம். ராத்திரி பத்து பனிரெண்டு சில நாட்கள் வருவதேயில்லை. இந்த விஷயமெல்லாம் சொந்தக்காரர்கள் எல்லோருக்கும் தெரிந்ததுதான். ஆனால் ஜமுனா மட்டும் யாரிடமும் புகார் என்று ஒரு வார்த்தை சொல்வதில்லை. ஊரில் ஜமுனாவின் அம்மாவைப் பார்த்தபோது சொல்லி அழுதாள். இப்போது அழுது என்ன பிரயோஜனம் அத்தை என்று வாய்வரை வந்துவிட்டது. பாவம் அவளை மேலும் நோகவைப்பானேன் என்று ரெண்டு வார்த்தை ஆறுதலாக சொல்லிவிட்டு வந்துவிட்டான் வெங்கட்ராவ்.

என்ன மனுஷர்கள் இவர்களெல்லாம். கவர்மென்ட் உத்தியோகம் என்கிற ஒரே தகுதியில், யார் என்ன என்று விசாரிக்காமல் நாள் நிச்சயம் செய்துவிட்டு வெங்கட்ராவுக்கு அழைப்பிதழ் அனுப்பி வைத்தார்கள். கம்பெனியில் லீவ் கேட்டான். அழைப்பிதழைக் காட்டியும் அந்த சிந்திக்காரன் மறுத்து விட்டான். வெங்கட்ராவ் அவன் மேஜையிலிருந்தே ஒரு பேப்பரைக் கிழித்து ராஜினாமா எழுதிக் கொடுத்தான்.

இருபது நாளைக்கென்று கணக்கு பார்த்து அவன் கொடுத்த நூற்றைம்பது ரூபாயில், ரயில் டிக்கெட்டே எண்பதுக்கும்மேல் ஆகிவிட்டது. அவ்வளவு தொலைவிலிருந்து ஓடி வந்துதான் என்ன. ஒரு நிமிஷம் கூட ஜமுனாவிடம் பேச முடியவில்லை. என்ன பேசி என்ன ஆகப்போகிறது. எல்லாம் நிர்ணயித்த கதியில் இயங்கிக்கொண்டு இருக்கையில் இவனோ அல்லது அவளோதான் என்ன செய்திருக்க முடியும்.

இரண்டு நிமிஷம் அழுதிருக்கலாம். அதுதான் நாள் பூரா அழுதாகிறதே மனசுக்குள். அவளாவது கொஞ்சம் சுகப்பட்டிருக்கலாம். போயும் போயும் சூதாடியிடமா விழ வேண்டும். அவள் தலையெழுத்து யாரென்ன செய்வது.

இருபத்தியெட்டு வயதிற்குள் ஒரு பெண் இப்படியா நார்நாராகி விடுவாள். பழைய ஜமுனா இவளுடைய பெண்ணோ என நினைக்குமளவிற்கு மூப்படைந்து விட்டாள், ஆறே வருஷத்தில்.

ஆறு வருஷத்தில் அவன் நினைத்தே பார்த்திராத தெல்லாம் நடந்து விட்டன. முதல் விஷயம் ஜமுனாவின் கல்யாணம். அது நடந்து முடிந்ததும் அப்பாவை போலவே, அவனுக்கும் கவலை பிடித்துக் கொண்டது. அடுத்து என்ன செய்வதென்று. பேருக்கு என்று இருந்த வேலையையும் ஒரு வேகத்தில் உதறிவிட்டு வந்தாயிற்று. இரண்டு வருஷம் அக்கம்பக்க ஊர்களில் தொத்தல் வேலையாக நாலைந்து பார்த்து, கடைசியில் ஊர் ஊராகத் திரிகிற இந்த வேலை கிடைத்தது. எதிலாவது வலிந்து ஈடுபடுத்திக் கொண்டால் தேவலாம் என்றுதான் இந்த வேலையில் சேர்ந்தான். மேலும் சம்பளமும் கணிசமாய்க் கிடைத்தது. என்ன கிடைத்து என்ன.

மாமா நீ சாப்பிடலையே ஐஸ்கிரீம்.

அப்போதுதான் தன் கிண்ணத்தைப் பார்த்தான் வெங்கட்ராவ். ஐஸ்க்ரீம் முழுக்கக் கரைந்து சிவப்பு ஜெர்ரி பழம் மிதந்து கொண்டு இருந்தது. அதை மட்டும் எடுத்து வாயில் போட்டுக்கொண்டு கைக்குட்டையால் பப்புவின் வாயைத் துடைத்துவிட்டுத் தூக்கிக் கொண்டான். பப்புவை சீக்கிரமே கொண்டுவந்துவிடச் சொல்லி ஜமுனா சொன்னது ஞாபகம் வர சற்று வேகமாக நடந்தான்.

XXX XXX XXX

ஜமுனாவின் புருஷன் குனிந்து சாப்பிட்டபடி கேட்டான்.

எங்கே பப்புவைக் காணோம்.

பக்கத்து வீட்ல விளையாடிகிட்டிருக்கும்.

வெளக்கேத்தினப் பிறகும் ஏன் வெளையாட வுடற, அறிவில்ல.

ரசம் ஊற்றிய வலதுகையை மேலே படாதபடி வைத்துக் கொண்டு மௌனமாய் சுவரில் சாய்ந்து கொண்டாள்.

இடது கையால் மோரைக் குவளையிலிருந்து ஊற்றி விட்டு உள்ளே போய் உப்பு கொண்டு வரும் போது வெங்கட்ராவ் பப்புடன் படியேறி வருவது

தெரிந்தது. வராதே என்று வலதுகையால் சைகை செய்தாள். அதை கவனிக்காமல் செருப்பைக் கழற்றிவிட்டு உள்ளே வந்தவனை ஜமுனாவின் புருஷன் நிமிர்ந்து பார்த்தான்; பின் தலையைத் திருப்பி ஜமுனாவை முறைத்தான். அவன் பார்வையைத் தவிர்க்க பிரயாசை கொண்டு ஜமுனா சுவரில் தொங்கிய சுவாமி காலண்டரைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

இறுக்கத்தைத் தளர்த்த எண்ணி குழந்தையை இறக்கியபடி 'நமஸ்தே பாவோஜி' என்றான் வெங்கட்ராவ். தோளில் இருந்த பையையும் சுவரருகில் வைத்தான். ஜமுனாவின் புருஷன் மும்முரமாக சாப்பிடும் பாவணையில் இருந்தான்.

எங்கே வந்தே

கம்பெனி வேலையா...

உங்க கம்பெனிக்கு வேலை இந்த ஊர்ல மட்டுந்தானா.

பாவோஜி

என்னடா பாவாஜி கீவோஜி எல்லாம், ஊர்ல பார்த்தபோதே சொன்னேனா இல்லையா இந்தப் பக்கம் வராதேன்னு. அப்புறம் ஏண்டா வர்றீங்க.

அப்படி சொன்னா எப்படி பாவோஜி. சொந்தம்னு..

சொந்தமாவது பந்தமாவது. உங்க ஆளுங்க எவனும் இங்கக் காலை வெக்கக்கூடாது. அறுந்த வெரலுக்கு சுண்ணாம்பு தடவாத பசங்களுக்கு பேரு சொந்தக்காரங்க. அதைப் போடறோம் இதைப் போடறோம்னு ஜமுக்காளத்துல உக்காந்து ஜம்பமா பேசிட்டு கட்டின பொடவையோட அனுப்பினானுங்க இல்ல.

பாவோஜி அவங்க வீட்டு நெலமைல...

பெரிய தர்மப்பிரபு. ஏன் நீயே பண்ணிகிட்டிருக்கறதுதானே. சுத்தரதெல்லாம் சுத்தீட்டு கல்யாணம்ன ஒடனே பாம்பே பக்கம் ஓடீட்ட இல்ல.

பாவா அதிகமா பேசாத.

வெளியிலப் போடா நாயே - எச்சிற்கையுடன் எழுந்தான்.

வெங்கட்ராவ் பையைத் தூக்கித் தோளில் மாட்டிக் கொண்டவன், ஜிப்பைத் திறந்து பப்புவின் பழைய சட்டை டிரவுசரை, அதிர்ந்து நின்றிருந்த ஜமுனாவின் எதிரில் வைத்தான்.

சுவரில் ஒண்டியபடி முழித்துமுழித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான் பப்பு. ஜமுனாவின் புருஷன் திடீரென்று ஆவேசம் வந்தவன் போலப் பாய்ந்து எச்சிற்கையுடன் பப்புவின் தொப்பி சட்டையெல்லாம் பட்டன் தெறிக்க அவிழ்த்தான். பப்பு வலியில் கத்த ஜமுனா ஓடி, குழந்தையைத் தூக்கினாள். குழந்தையின் பேண்ட்டையும் உருவி வெங்கட்ராவ் முகத்தில் வீசி எறிந்தான்.

பணம் இருக்குன்னு எனக்குக் காட்டறியா? ராஸ்கல், வெளில போடா.

வெங்கட்ராவ் ஒரு கணம் என்ன செய்வதென்ற தயக்கத்தில் நின்றான். பிறகு புது உடைகளைக் கீழே இருந்து எடுத்துக் கொண்டு நிமிர்கையில் ஜமுனாவை தீர்க்கமாய் ஒருமுறை பார்த்தான். அவள், விசிக்கிற குழந்தையுடன் பிரமை பிடித்தவள் போல் நின்றிருந்தாள்.

வெங்கட்ராவ் படியிறங்கும்போது ஜமுனாவின் அழுகை காதில் விழுந்தது. அவன் திரும்பிப் பார்க்காமல் வேகமாக நடக்கத் தொடங்கினான்.

(பிப்ரவரி 1983) நிகழ்